# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

***************

முறையீட்டு மனு எண்: 104/2017/பே–2
ஆணை எண். 47/2018 நாள்: 12–03–2018

**திரு F. காஜாமொய்தீன்,**
**17/1-A. கொல்லன் கடை தெரு,**
**பரங்கிபேட்டை,**
**கடலூா் மாவட்டம்.**

**-- முறையீட்டு மனுதாரா்.**

**செயல் அலுவலா்,**
**பரங்கிபேட்டை பேரூராட்சி,**
**கடலூா் மாவட்டம்.**

**-- எதிர் மனுதாரா்.**

## ஆணை

திரு. F.காஜா மொய்தீன், 17/1A, கொல்லன் கடை வீதி, பரங்கிபேட்டை அவா்களது 03.02.2017ம் நாளிட்ட புகாா் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.02..2017 அன்று பெறப்பட்டது. மேற்படி மனு முறையீட்டு மனு எண் 104/17 எண்ணாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள்/வாக்குமூலங்கள் பெறப்பட்டும், பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரா் தனது முறையீட்டு மனுவில் பரங்கிபேட்டை பேரூராட்சி சா்வே எண் (பழையது) 56/1 புதிய சா்வே எண் 565/2, பட்டா எண். 2102ல் உள்ள இடம் திரு B.M.F. ஹம்ஜா மரைக்காயருக்கு (மனுதாரரின் சகோதரா்) சொந்தமானது எனவும் 14.07.1980ம் தேதி இவா்களின் தந்தை திரு B.M.F. பக்ருதீன் மரைக்காயரின் பாகப்பரிவினையில் திரு B.M.F ஹம்ஜா மரைக்காயருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் அளவு கீழ்மேல் ஜாதியடி 42.5 தென்வடல் ஜாதியடி 33.25 எனவும் 07.07.1995ல் தனது தாயாரின் பாகப்பிரிவினையில் இருந்து ஒதுக்கப்பட்ட பாகத்தின் அளவு கீழ்மேல் 42.5 ஜாதியடி தென்வடல் 10 ஜாதி அடிஆகமொத்தம் இருவரின் பாகமும் சோ்த்து திரு B.M.F ஹம்ஜா மரைக்காயருக்கு பாத்தியமான சொத்தின் அளவு கீழ் மேல் ஜாதியடி 42.5 தென்வடல் ஜாதியடி 43.25 என தெரிவித்துள்ளாா்.

மேற்குறிப்பிட்ட இடத்திற்கு தெற்கில் தனக்கு பாத்தியமான இடம் உள்ளதாக்வும் அதன் அளவு தென்வடல் ஜாதியடி 22, கீழ் மேல் ஜாதியடி 42.5 எனவும் இதில் திரு B.M.F.ஹம்ஜா மரைக்காயர் தனக்கு பாத்தியமான இடத்தில் 5 அடியினை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டிக்கொண்டுள்ளார் எனவும் இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

தான் பரங்கிபேட்டை பேரூராட்சியினை பதிவு தபால் மூலம் தொடர்பு கொண்டு திரு B.M.F.ஹம்ஜா மரைக்காயர் கட்டிடம் கட்ட அனுமதி கோரிய மனுவின் நகல் மற்றும் அவரால் கொடுக்கப்பட்ட இதர ஆவணங்களின் நகல் மற்றும் அதிகாரிகளால் கட்டிடம் கட்ட அனுமதி அளிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்களை வழங்க கோரிக்கை விடுத்ததாகவும், பரங்கிபேட்டை பேரூராட்சி, பொருத்தமில்லாத காரணம் காட்டி கொடுக்க மறுத்துவிட்டதாகவும் தெரிவித்தள்ளார். திரு B.M.F ஹம்ஜா மரைக்காயர் அவருடைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அளவிற்கு மட்டும் அனுமதி அளித்திருந்தால் பேரூராட்சி ஆவணங்களின் நகல்களை கொடுக்க தயக்கம் காட்டுவது ஏன் எனவும், மேலும் விண்ணப்பதாரர் கட்டிடம் கட்ட அனுமதிபெற சரியான ஆவணங்கள் கொடுத்திருந்தால் அதன் நகல்களை பேரூராட்சி கொடுக்க தயங்குவது ஏன் என கேட்டு மேற்படி ஆவணங்களை பெற்றுத் தரக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் மனு சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 05.05.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 272/2014/அ.1/நாள் 26.05.2017ன் மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

அதில் திரு B.M.F ஹம்ஜா மரைக்காயருக்கு, பரங்கிபேட்டை மெயின் ரோட்டில் பழைய சர்வே எண் 56/1 புதிய சர்வே எண் 565/2ல் புதிய RCC தரைதளம் மற்றும் முதல் தளம் குடியிருப்பு வீடு கட்டுவதற்கு 22.03.2016ல் விண்ணப்பம் செய்துள்ளதாகவும், மேற்படி இடத்தினை பேரூராட்சி செயல் அலுவலரால் பார்வையிட்டு செயல் அலுவலரின் மூ.மு.எண் 108/2016/அ2, நாள் 24.03.2016ன்படி கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் திரு F.காஜாமொய்தீன் தகவல் பெறும் உரிமை சட்டம் 2005 பிரிவு 6(1) ன் கீழ் 23.09.2016 ம் தேதிய கடிதத்தில் திரு B.M.F ஹம்ஜாமரைக்காயர் என்பவருக்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதியின் ஆவண நகல்களை கேட்டதாகவும், இதனை திரு B.M.F. ஹம்ஜா மரைக்காயர் 29.09.2016ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி ஆவணங்களை கொடுக்கக்கூடாது என ஆட்சேபணை தெரிவித்ததால் , மேற்படி தகவல்கள் மூன்றாம் தரப்பினர் தொடர்புடையது என்பதால் தகவல் பெறும் உரிமை சட்டம் 2005 பிரிவு 9 மற்றும் 11ன்படி மேற்படி ஆவணங்களின் நகல்கள் வழங்க இயலாது என முறையயிட்டு மனுதாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்து, மேற்படி ஆவணங்களின் நகல்களையும் இணைத்து

இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கையாக பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 20.06.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரர் மற்றும் பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரின் நேரடி விளக்கங்களை பெற இம்முறைமன்ற நடுவத்தில் 04.07.2017 அன்று ஆஜராக ஆணையிடப்பட்டது.

இதனடிப்படையில் பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 04.07.2017ம் தேதியன்று தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".......தான் 05.06.2015 முதல் பரங்கிபேட்டை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும் அதற்கு முன்னர் அதே மாவட்டத்தில் பட்டாம்பாக்கத்தில் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். திரு காஜாமொய்தீன் என்பவர் அனுப்பிய மனுவிவரம் தனக்கு தெரியும் எனவும், அதேபோன்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய விவரமும் தனக்கு தெரியும் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். 26.05.2017ல் தான் ஒரு அறிக்கை அனுப்பியுள்ளதாகவும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விவரம் கோருவதற்கு முன்பு திரு F.காஜாமொய்தீன் தனக்கு எந்த விவரமும் தெரிவிக்கவில்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரியும் திரு ம. சத்தியசீலன், மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை பார்வையிட்டதாகவும், அவர் ஒரு அறிக்கை சமர்ப்பித்ததாகவும் அந்த அறிக்கையின் நகலினை தற்போது சமர்ப்பித்துள்ளதாகவும் தனது வாக்குமுலத்தில் தெரிவித்துள்ளார்.

வரித்தண்டலரிடம் கட்டிட உரிமம் வரைபட அனுமதி கோரிய திரு B.M.F.ஹம்ஜா மரைக்காயர் கோரியபோது 24.01.2016ல் ஒரு அறிக்கை கொடுத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் கட்டிடம் இன்னும் முழுமை பெறாததால் வரிவிதிப்பு நிர்ணயம் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். ஆவணத்தில் உள்ள அளவோடு கள பணி சரிபார்க்கப்பட்டு அந்த அளவிற்கு அனுமதி வழங்கியதாகவும், ஆனால் அளவுக்கு அதிகமாக கட்டியிருக்கிறார்களா என சரி பார்த்து விதிமீறல்கள் இருந்தால் அந்த அளவிற்கு மதிப்பீடு செய்து அதற்கும் வரி விதிப்பும், சொத்து வரியும் மறு நிர்ணயம் செய்யப்படும் எனவும் தனது வாக்குமுலத்தில் தெரிவித்துள்ளார். விதிகளை மீறி கட்டியிருந்தால் இணக்க கட்டணத் தொகையும் கட்டவேண்டும் எனவும், எவ்வளவு கூடுதலாக கட்டியிருந்தாலும் பேரூராட்சி மூலம் வரி விதிப்பினை சரியாக விதிக்கப்படும் எனவும், பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையில் விதிகளுக்கு மாறாக அனுமதி
பெற்றதற்கு மாறாக கட்டியிருந்தால் பேரூராட்சி மூலம் இடிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் எனவும் இதுமாதிரியான புகார்கள் வந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தான் கள ஆய்வு செய்து அறிக்கையினை ஒரு வாரத்திற்குள் சமர்ப்பிப்பதாக தனது வாக்குமுலத்தில் பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு Fகாஜாமொய்மதீன், இம்முறைமன்ற நடுவத்தில் தனது 04.07.2017ம் நாளிட்ட வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".....03.02.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அனுப்பப்பட்டது எனவும் இதில் பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மீது சில குற்றச்சாட்டு வைத்து மனு அனுப்பியதாக தெரிவித்துள்ளார். தனது குற்றச்சாட்டு மனுவில் திரு B.M.F.ஹம்ஜா மரைக்காயர் தனக்கு பாத்தியமான இடத்தில் 5 அடியினை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதாகவும் இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது எனவும் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். தான் இது சம்பந்தமாக பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு திரு B.M.F.ஹம்ஜா மரைக்காயர் கட்டிடம் கட்ட வழங்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள், மனுவின் நகல் அவரால் கொடுக்கப்பட்ட இதர ஆவண நகல்கள் மற்றும் அதிகாரிகளால் கட்டிடம் கட்ட அளிக்கப்பட்ட அனுமதிக்கான நகல்களை வழங்குமாறு கோரியதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர், தனது 19.10.2016 மற்றும் 1412.2016ம் நாளிட்ட கடிதங்களில் தான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய தகவல்கள் மூன்றம் நபர் சம்பந்தப்பட்டதென்பதால் அவற்றை வழங்குவதற்கு அது சம்பந்தமாக திரு B.M.F ஹம்ஜா மரைக்காயர் ஆட்சேபணை தெரிவிப்பதால் வழங்க இயலாது என தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார். பரங்கிபேட்டை பேரூராட்சி திரு B.M.F. ஹம்ஜா மரைக்காயர் பாகப்பிரிவினை பத்திரத்தின்படி கிடைத்த உரிய நிலத்திற்கு சட்டபூர்வ அனுமதி வழங்கியிருந்தால் தான் கோரிய ஆவணங்களை பேரூராட்சி கொடுத்திருக்கலாம் எனவும் இதில் முறைகேடு நடந்திருப்பதால்தான் பேரூராட்சி மேற்படி ஆவணங்களை கொடுக்க மறுப்பதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேற்படி நபர் தன்னுடைய நிலத்தில் சுமார் 5 அடி ஆக்கிரமித்துள்ளது தொடர்பாக பரங்கிபேட்டை D.M. Court ல் (மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ) ஏற்கனவே வழக்கு தொடுத்துள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் சட்டத்திற்கு புறம்பாக பதிவேடுகளை திருத்தி போலியாக பட்டா பெற்றுள்ளதாகவும் இது குறித்தும் இதே நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கு பரங்கிபேட்டை நீதிமன்றத்தில் தொடர்ந்து நிலுவையில் உள்ளதாக தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் திரு F.காஜாமொய்தீன் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 21.11.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் திரு B.M.Fஹம்ஜா மரைக்காயர் 5 அடி நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிவிப்பட்டுள்ள இடத்திற்கு கட்டிட அனுமதி வழங்கிய ஆவணங்கள் மற்றும் முறையீட்டு மனுதாரர் தனது மனு மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள வழக்கு குறித்த விவரங்களை தெரிவிக்க பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 272/2016/அ.1/நாள்.04.12.2017ன் மூலம் தனது அறிக்கையினை திரு B.M.F.ஹம்ஜா மரைக்காயருக்கு கட்டிட அனுமதி வழங்கிய ஆவணங்களுடன் ஏற்கனவே 26.05.2017ல் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையுடன் கூடுதலாக சில விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

1. மனுதாரர் நிலத்தில் ஆக்கிரமிப்பு உள்ளது குறித்து பேருராட்சியில் எவ்வித மனுவும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் இது குறித்து எந்த கேள்வியும் எழவில்லை என தெரிவித்துள்ளார். திரு B.M.F. ஹம்ஜா மரைக்காயர் நத்தம் சர்வே
2. எண் 56/1 புதிய சர்வே எண் 565/2ல் ஆர்.சி.சி. கடடிடம் கட்ட 22.04.2016ல் விண்ணப்பம் செய்துள்ளதாகவும், மேற்படி மனுவினை பரிசீலித்து வரித்ததண்டலர் திரு ம. சத்தியசீலன் என்பவர் கட்டிடம் கட்டப்படவுள்ள இடத்தினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார் எனவும் இதன் அடிப்படையில் மொத்த காலியிட மனை 2184 சதுர அடியில் தரை தளத்திற்கு மட்டும் 890 சதுர அடிக்கு உரிமம் வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்..
3. நில ஆக்கிரமிப்பு குறித்து முறையீட்டு மனுதாரர் வழக்கு தொடுத்ததாக எந்த ஆவணமும் பேரூராட்சிக்கு தெரிவிக்கவில்லை எனவும், திரு ஹம்ஜாமரைக்காயர் என்பவர் முறையீட்டு மனுதாரர் திரு F.காஜாமொய்தீன் மீது O.S.NO. 07/2009 ல் பரங்கிபேட்டை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் மன்றத்தில் வ்ழக்கு தாக்கல் செய்துள்ளார் எனவும் அவ்வழக்கானது முறையீட்டு மனுதாரர் திரு. F.காஜாமொய்தீன் திரு B.M.F. ஹம்ஜாமரைக்காயர் பெயருக்கு 16.01.2016ல் ஏற்பட்ட கிரய உடன்படிக்கையின்படி திரு ஹம்ஜாமரைக்காயருக்கு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் எழுதி கொடுக்க தீர்ப்பளிக்கவேண்டும் என்பதற்கு தாக்கல் செய்யப்பட்டது என தெரிவித்தள்ளார். மேலும் அவ்வழக்கு திரு B.M.F ஹம்ஜாமரைக்காயர் என்பவரால் முறையீட்டு மனுதாரர் மீது போடப்பட்ட வழக்கு எனவும், அவ்வழக்கில் நில ஆக்கிரமிப்பு குறித்து முறையீட்டு மனுதாரரால் எழுப்பப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இதில் 08.04.2009 அன்று வாதி கோரியவாறு பிரதிவாதியான திரு காஜாமொய்தீன் வாதி பெயருக்கு பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் எழுதிக் கொடுக்கவேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக தங்களது வாக்குமூலத்தினை பதிவு செய்யக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் 28.02.2018 அன்று நேரில் ஆஜராக கோரி முறையீட்டு மனுதாரர் மற்றும் பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவ 14.12.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இம்முறையீடு தொடர்பாக திரு. B.M.F ஹம்ஜா மரைக்காயர் தன்னையும் இவ்வழக்கில் சேர்க்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் 09.01.2018ல் மனுவினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி மனுவில் இப்பொருள் தொடர்பாக சிதம்பரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். O.S.No. 12/2011 ல் தொடுக்கப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதனை ஏற்று மேற்படி திரு B.M.F ஹம்ஜா மரைக்காயரையும் தனது வாக்குமுலத்தினை பதிவு செய்யக் கோரி 28.02.2018ல் ஆஜராக இம்முறைமன்ற நடுவ 23.01.2018ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 14.12.2017ம் அழைப்பாணையினை ஏற்று முறையீட்டு மனுதாரர் திரு F. காஜாமொய்தீன் தனது 28.02.2018ம் தேதிய வாக்குமூலத்தில் மேற்படி பொருள்

தொடர்பாக திரு B.M.J.ஹம்ஜா மரைக்காயர், பட்டாவில் 42 அடியாக இருந்ததை 50.5 அடியாக திருத்தியதைத் தொடர்ந்து இது குறித்த வழக்கு பரங்கிபேட்டை நீதிமன்றத்தில் வழக்கு எண் 21/2016 என இருந்ததாகவும், மேற்படி வழக்கு சிதம்பரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பரங்கிபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 28.02.2018 அன்று தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"....தான் 04.01.2018 முதல் பரங்கிபேட்டை பேரூராட்சியில் பணி புரிவதாகவும், திரு F.காஜாமெய்தீன் மனு குறித்த விவரம் தனக்கு தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். 12.09.2017 அன்றைய பேரூராட்சி கடிதத்தில் சர்வே எண் 565/2ல் தரை தளம் 890 சதுர அடிக்கும் முதல் தளம் 245 சதுர அடிக்கும் ஆகமொத்தம் 1135 சதுர அடிக்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்ட விவரம் தெரிவிக்கப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் அனுமதி வழங்கப்பட்ட முதல் தளத்தில் 245 சதுர அடிக்கு மாறாக 645 சதுர அடி கூடுதலாக கட்டியுள்ளார் என்றும், இது குறித்து இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தான் மீண்டும் கள ஆய்வு மேற்கொண்டு முறையீட்டு மனுதாரரால் குற்றம் சாட்டும் திரு B.M.F. ஹம்ஜாமரைக்காயர் (கட்டிட அனுமதி பெற்றவர்) என்பவரிடம் உரிமை கோரும் பட்டா, ஆவணம் ஆகியவற்றினை சரிபார்த்து அனுமதி கொடுத்த விவரம், உரிமை கோரும் பட்டா அடிப்படையில் உள்ளதா, வேறுபாடு உள்ளதா, அனுமதி வழங்கப்பட்டமைக்கும் கட்டிடத்திற்கும் வேறுபாடு உள்ளதா என்ற விவரங்களை 15 நாட்களில் சமர்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். தல ஆய்வு செய்தும், ஆவணங்களை முழுமையாக பரிசீலித்தும் முரண்பாடுகள் இருப்பின் சட்ட விதிகளின்படி தக்க நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது நிலத்தில் திரு. B.M.F.ஹம்ஜாமரைக்காயர் 5 அடி நிலம் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளது தொடர்பாகவும், பட்டாவில் திருத்தம் செய்தது தொடர்பாகவும் பரங்கிபேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாக தனது மனுவிலும் தனது வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார்.

நில ஆக்கிரமிப்பு செய்தவராக தெரிவிக்கப்பட்டுள்ள திரு B.M.F ஹம்ஜாமரைக்காயர் என்பவரும் தனது 09.01.2018ம் நாளிட்ட தன்னையும் இவ்வழக்கில் சேர்க்கக்கோரி சமர்ப்பித்த முறையீட்டு மனுவில் மேற்படி சொத்து சம்பந்தமாக சிதம்பரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S.No.12/2011 ல் தொடரப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளார். இதன் மூலம் மேற்படி பொருள் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளது புலனாகிறது.

எனவே 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது. எனவே மேற்படி சட்டக்கூறுகளின்படி இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகளை தற்போது கைவிடலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

இருப்பினும் திரு B.M.F ஹம்ஜாமரைக்காயர் என்பவரால் பேரூராட்சியால் அனுமதிக்கப்பட்ட அளவைக்காட்டிலும் அதிக அளவிற்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது குறித்து நீதிமன்ற உத்திரவுகள மற்றும் சட்ட விதிகளின்படி தக்க நடவடிக்கை எடுக்கவும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறை மன்ற நடுவர்

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

பெறுநர்

1.திரு F. காஜாமொய்தீன்,
17/1-A. கொல்லன் கடை தெரு,
பரங்கிபேட்டை,
கடலூர் மாவட்டம்.

2.திரு B.M.J. ஹம்ஜாமரைக்காயர்,
37,JUNAID MAIN STREET.
PARANGIPETTAI,
CUDDALORE DISTRICT.

3.செயல் அலுவலர்,
பரங்கிபேட்டை பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை,
கடலூர் - 607001